18th August 1960]

SRI A. VEDARATHNAM : அதைப் பரிசிலனை செய்ததில் நிபுணர்களின் முடிவு என்ன? எத்தனை பர்சென்ட் அதில் இரும்பு அடங்கி இருக்கிறதென்று குறிப்பிட்டிருக்கிறார்கள்? அந்த இடத்தை சர்வே செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : சர்வே செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அவர்கள் அனுப்பிய ஒரு கட்டியில் 43 சத விகிதம் இரும்பு இருந்தது. அதைக்கொண்டு அங்குள்ள கனிப் பொருள்கள் அத்தனையும் 43 சத விகிதம் இரும்பு உடையதாக இருக்கும் என்று நினைக்க முடியாது. அதற்கு மேலாகவும் இருக்கலாம், அல்லது குறைவாகவும் இருக்கலாம்.

Chinaware Industry

* 195 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் பீங்கான் தொழிற்சாலை ஏற்படுத்துவதை ஆராய்வதற்காக திரு. எ. எம். எம். முருகப்ப செட்டியார் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கை சர்க்காருக்குக் கிடைத்ததா?

(ஆ) அப்படியானால், அந்த அறிக்கையின் நகலொன்று அசெம்பிளி லைப்ரெரியில் வைக்கப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Project reports on the following have been received :—

(1) Sanitaryware and Stoneware manufacture;

(2) Wall Tile manufacture; and

(3) Tiles and Bricks and Stoneware manufacture.

In regard to " Firebricks " only a tentative project report has been received.

(b) A copy of the report will be placed in the Legislature Library after the consolidated report has been prepared and printed.

SRI S. M. ANNAMALAI : இந்த அறிக்கையை ஒட்டி சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன? எங்கெங்கே பீங்கான் தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம் என்று சர்க்கார் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த அறிக்கை எல்லாம் அச்சிடப்பட்டு பிரசுரிக்கப்படும். அதைப்பார்த்து யார் யார் எந்த எந்தத் தொழிலை நடத்தவேண்டுமென்று நினைக்கிறார்களோ அவர்களுக்கு இந்த விவரங்கள் எல்லாம் கிடைக்கும்.